www.freetnbooks.com

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2025

## எட்டாம் வகுப்பு

பதிவு எண் : | | | | | |

## சமூக அறிவியல்

நேரம் : 2.30 மணி

மதிப்பெண்கள் : 100

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 15 x 1 = 15

1. சர் வில்லியம் ஹாக்கின்ஸ் _______ நாட்டைச் சேர்ந்தவர்.
   அ) போர்ச்சுக்கல் ஆ) ஸ்பெயின் இ) இங்கிலாந்து ஈ) பிரான்ஸ்
2. 1757 ஆம் ஆண்டில் வங்காளத்தை ஆட்சி செய்தவர்
   அ) சுஜா-உத்-தௌலா ஆ) சிராஜ்-உத்-தௌலா இ) மீர்காசிம் ஈ) திப்புசுல்தான்
3. பிளாசிப்போர் நடைபெற்ற ஆண்டு?
   அ) 1757 ஆ) 1764 இ) 1765 ஈ) 1775
4. மகல்வாரி முறையில் 'மகல்' என்றால் என்ன?
   அ) வீடு ஆ) நிலம் இ) கிராமம் ஈ) அரண்மனை
5. ராணி லட்சுமிபாய் எப்பகுதியில் ஏற்பட்ட புரட்சியை வழிநடத்தினார்?
   அ) மத்திய இந்தியா ஆ) டெல்லி இ) கான்பூர் ஈ) பரெய்லி
6. உலக மண் நாளாக கடைபிடிக்கப்படும் நாள்
   அ) ஆகஸ்ட் 15 ஆ) ஜனவரி 12 இ) அக்டோபர் 15 ஈ) டிசம்பர் 5
7. _______ என்ற கருவி ஈரப்பதத்தை அளக்கப் பயன்படுகிறது.
   அ) காற்றுமானி ஆ) அழுத்தமானி இ) ஈர நிலைமானி ஈ) வெப்பமானி
8. புவியின் உள்ள நன்னீரின் சதவீதம்?
   அ) 71% ஆ) 97% இ) 2.8% ஈ) 0.6%
9. போரின் காரணமாக நடைபெறும் குடிபெயர்வு சார்ந்தது?
   அ) மக்களியல் ஆ) சமூக மற்றும் கலாச்சாரம் இ) அரசியல் ஈ) பொருளாதாரம்
10. உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஓய்வு பெறும் வயது?
   அ) 62 ஆ) 64 இ) 65 ஈ) 58
11. ஒரு மாநிலத்தின் ஆளுநர் யாரால் நியமிக்கப்படுகிறார்?
   அ) குடியரசுத் தலைவர் ஆ) துணைக் குடியரசுத் தலைவர் இ) பிரதம மந்திரி ஈ) முதலமைச்சர்
12. கீழ்க்காண்பவைகளில் எந்த ஒன்று இந்தியக் குடியுரிமை பெறும் வழிமுறை அல்ல?
   அ) பிறப்பின் மூலம் ஆ) சொத்துரிமை பெறுவது
   இ) வம்சாவழியின் மூலம் ஈ) இயல்பு குடியுரிமை மூலம்
13. இந்திய அரசியலமைப்பின் முகவுரை திருத்தப்பட்ட ஆண்டு?
   அ) 1951 ஆ) 1976 இ) 1974 ஈ) 1967
14. இந்திய ரூபாய் குறியீட்டினை (₹) வடிவமைத்தவர் யார்?
   அ) உதயகுமார் ஆ) அமர்த்தியா சென் இ) அபிஜித் பானர்ஜி ஈ) இவற்றில் எவருமில்லை
15. வங்கி பணம் என்பது எது?
   அ) காசோலை ஆ) வரைவு இ) கடன் மற்றும் பற்று அட்டைகள் ஈ) மேற்கூறிய அனைத்தும்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** 5 x 1 = 5

16. முகலாயப் பேரரசர் _______ இந்தியாவில் ஆங்கிலேயர்கள் வர்த்தகம் செய்ய அனுமதி அளித்தார்.
17. இண்டிகோ (அவுரி) கிளர்ச்சி _______ ல் நடைபெற்றது.
18. நீர் சுழற்சியில் _______ நிலைகள் உள்ளன.
19. இந்திய அரசியலமைப்புச்சட்டம் _______ குடியுரிமையை மட்டும் வழங்குகிறது.
20. இந்திய ரிசர்வ் வங்கி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு _______.

**III. பொருத்துக.** 5 x 1 = 5

21. டெல்லி - கன்வர் சிங்
22. கான்பூர் - கான் பகதூர் கான்
23. ஜான்சி - நானாசாகிப்
24. பரெய்லி - லட்சுமிபாய்
25. பீகார் - இரண்டாம் பகதூர் ஷா

**IV. சரியா? தவறா?** 3 x 1 = 3

26. 1799 அக்டோபர் 17ம் நாள் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார்.

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with CamScanner

www.freetnbooks.com



27. படிவுப் பாறைகளைச் சுற்றி எரிமலைகள் காணப்படுகின்றன.
28. இந்திய நாட்டிற்கென ஒரு சமயம் உள்ளது.

**V. பின்வருவனவற்றில் சரியான கூற்றை தேர்வு செய்க.** 2 x 1 = 2

29. i) கவர்னர் நினோ டி குன்ஹா போர்ச்சுக்கீசிய தலைநகரை கொச்சியிலிருந்து கோவாவிற்கு மாற்றினார்.
ii) போர்ச்சுகீசியர்கள் இந்தியாவிலிருந்து கடைசியாக வெளியேறினர்.
iii) டச்சுக்காரர்கள் சூரத்தில் தங்கள் முதல் வணிக மையத்தை நிறுவினர்.
iv) இங்கிலாந்தின் மன்னர் முதலாம் ஜேம்ஸ் ஜஹாங்கீர் அவைக்கு சர் தாமஸ் ரோவை அனுப்பினார்.
அ) 1 மற்றும் 2 சரி ஆ) 2 மற்றும் 4 சரி இ) 3 மட்டும் சரி ஈ) 1,2 மற்றும் 4 சரி

30. **தவறான இணையைக் கண்டுபிடிக்கவும் :**
அ) மருதுபாண்டியர் - எட்டயபுரம்
ஆ) கோபால நாயக்கர் - திண்டுக்கல்
இ) கேரள வர்மன் - மலபார்
ஈ?) துண்டாஜி - மைசூர்

**VI. காரணம் கூறுக : (ஏதேனும் 2 மட்டும்)** 2 x 2 = 4

31. தீப்பாறை எரிமலை பகுதியில் காணப்படுகிறது.
32. உயரம் அதிகரிக்கும் போது வெப்பம் குறைகிறது.
33. நீர் புகாத இடங்களில் நீரின் ஊடுருவல் குறைவாக உள்ளது.

**VII. வேறுபடுத்து. (ஏதேனும் 3 மட்டும்)** 3 x 2 = 6

34. உருமாறிய பாறைகள் மற்றும் படிவுப் பாறைகள்.
35. காலநிலை மற்றும் வானிலை
36. நிலையான மற்றும் பருவகால காற்றுகள்
37. மண்வள பாதுகாப்பு மற்றும் மண்ணரிப்பு

**VIII. கீழ்க்காணும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி (ஏதேனும் 10 மட்டும்)** 10 x 2 = 20

38. இந்தியாவில் இருந்த ஆங்கிலேயர்களின் வர்த்தக மையங்களைக் குறிப்பிடுக.
39. இருட்டறை துயரச் சம்பவம் பற்றி குறிப்பு வரைக.
40. இரயத்துவாரி முறையின் சிறப்புக் கூறுகள் யாவை?
41. 1857ம் ஆண்டு புரட்சிக்கான உடனடிக் காரணம் என்ன?
42. தீப்பாறைகள் எவ்வாறு உருவாகின்றன?
43. “வெயிற் காய்வு” என்றால் என்ன?
44. நீர் சுழற்சி - வரையறு.
45. உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட நான்கு பெருநகரங்களைப் பட்டியலிடுக.
46. மாநில சட்டமன்றத்தின் இரு அவைகளின் பெயரை எழுதுக.
47. குடியுரிமையின் வகைகளைக் குறிப்பிடுக.
48. சமய சார்பற்ற நாட்டின் சிறப்புப் பண்புக் கூறுகள் யாவை?
49. பண்டமாற்று முறை என்றால் என்ன?
50. பொருளாதாரத்தின் கருப்பு பணத்தின் விளைவுகள் யாவை?

**IX. கீழ்க்காணும் வினாக்களுக்கு விரிவான விடையளி. (ஏதேனும் 5 மட்டும்)** 5 x 5 = 25

51. நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்கள் பற்றி குறிப்பிடுக.
52. நிலையான நிலவரி திட்டத்தின் நிறைகுறைகளை விவாதிக்க.
53. 1857 ஆம் ஆண்டு புரட்சியின் தோல்விக்கான காரணங்களை எழுதுக.
54. மண்ணடுக்குகள் பற்றி விவரிக்கவும்.
55. நகரமயமாதலினால் ஏற்படும் சவால்களை ஆராய்க.
56. மழைப்பொழிவின் பல வகைகளை விவரி.
57. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.
58. பண்டமாற்று முறையின் தீமைகள் யாவை?
59. ஒருவருக்கு எதன் அடிப்படையில் இந்தியக் குடியுரிமை இரத்து செய்யப்படுகிறது?

**X. 60. கீழ்க்கண்ட இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.** 8 x 1 = 8

1. கல்கத்தா 2. டெல்லி 3. பாரக்பூர் 4. கள்ளிக்கோட்டை 5. கொச்சி 6. மதராஸ்
7. ஆக்ரா 8. கல்கத்தா

61. **கீழ்க்கண்ட இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும்.** 7 x 1 = 7

1. பசுபிக் பெருங்கடல் 2. ஆசியா 3. ஆஸ்திரேலியா 4. இந்தியப் பெருங்கடல்
5. தென் அமெரிக்கா 6. [illegible] 7. நிலநடுக்கோடு

*******

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with CamScanner